BECON
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்.
87 A/L Day Class
Maths நல்லையா 9-00
Physics மணியம் 12-00
Chemistry சிவநாதன்
Botany சர்வானந்தா
Zoology செல்வா
ஆரம்பம் 12-11-86
புதன் 9-00 மணி

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

BECON (ஸ்ரீதர் சினிமா முன்பாக)யாழ்.
DAY CLASS
87 A/L பிரிவு II
பொருளியல் - திரு. வரதராஜன்
அளவையியல்- திரு. S. S மனோகரன்
கணக்கியல் - திரு. மரியதாஸ், திரு. ராஜன்
வர்த்தகம் - திரு. ரட்ணம்
இந்துநாகரிகம் - திருமதி. அருள்நங்கை
தமிழ் - திரு. நாகேஸ்வரன்
புவியியல் - திரு. சண்
ஆரம்பம்: 12-11-86
புதன் 7-00 மணி

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 25 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியுல் அவ் பிறை 08 (11-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 304

விஜிதரன் விவகாரம்

# உண்ணாவிரதம் இருப்பதற்கு மாணவர் முடிவு

## நாளைக்குள் நடவடிக்கை தேவையாம்

யாழ்ப்பாணம், நவம்பர் 11

யாழ். பல்கலைக்கழக மாணவன் அருணகிரிநாதன் விஜிதரன் விவகாரம் தொடர்பாக நாளை புதன்கிழமைக்குள் நடவடிக்கை எடுக்கப்படாவிடில், பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதம் இருப்பர்.

13 ஆம் திகதி அடையாள உண்ணாவிரதம் முதற்கட்டமாக ஆரம்பமாகும். பின்னர் கட்டம் கட்டமாக நடந்து 19 ஆம் திகதி சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கும்.

நேற்று நடைபெற்ற மாணவர் அமைப்புக்குழு கூட்டத்திலேயே இப்படி தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

உடன் நடவடிக்கையாக பலாலி வீதியில் வீதித்தடை போராட்டம் நடத்துவது.

12 ஆம் திகதிக்குள் இயக்கங்கள் நடவடிக்கை எடுக்காவிடின் 13ஆம்திகதிமுதல்கட்டம் கட்டமான அடையாள உண்ணாவிரதம் ஆரம்பிப்பது.

19 ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது.

இக்கூட்டத்திற்கு விஜிதரனின் தந்தை திரு. அருணகிரிநாதரும் சமுகமளித்திருந்தார்.

இதற்கிடையில் மாணவர் அமைப்புக்குழு, பல்கலைக்கழக உபவேந்தரிடம் நேற்றுக் கையளித்த அறிக்கையில் [விஜிதரன் கடத்தப்பட்டதற்கும் தமக்கும் எதுவித

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீதித்தடை போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 11

நேற்று யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் பலாலி வீதியில் இருமணிநேர வீதித் தடைப் போராட்டம் நடத்தப்பட்டது.

பலாலி வீதியில் உள்ள தபால்பெட்டிச் சந்திக்கும், பரமேஸ்வராச் சந்திக்கும் இடையிலேயே வீதித்தடை போடப்பட்டு, பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் வீதியில் குழுமி இருந்தனர்.

'விஜிதரன் எங்கே? இயக்கங்களே பதில் சொல்லுங்கள்' என்று கோஷித்தவாறு சுலோக அட்டைகளுடன் மாணவர்கள் குழுமியிருந்தனர்.

காலை 10 மணி முதல் 12 மணிவரை இம்மறியல் போராட்டம் நடைபெற்றது. (இ-5)

### பந்துக்குள் போதை வஸ்து!

கொழும்பு, நவ. 11

கிரிக்கெட் பந்துக்குள் போதை வஸ்து வைத்து கடத்தி வந்தார் என்று கூறப்படும் மேற்கு ஜெர்மன் பிரசை ஒருவர் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எதிரியான நோபர்ட் நீபன் தான் சுற்றவாளி என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து இம்மாதம் 14-ம் திகதி விசாரணை நடத்தப்படும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி திரு. கே. விக்னராஜா தெரிவித்தார். (இ-எ)

### அன்னையர் முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம், நவ. 11

பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் தொடர்பாக, மாணவர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு தமது ஆதரவை வழங்குவதாக அன்னையர்முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்று யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரையும், மாணவர் அமைப்பையும் அன்னையர் முன்னணி சந்தித்தது.

அச்சந்திப்பை தொடர்ந்தே எமது செய்தியாளரிடம் அன்னையர் முன்னணிப்பிரமுகர் இவ்வாறு தெரிவித்தார். (இ-5)




கடத்தல் எண்டால் எங்கை எங்கே எல்லாம் வைச்சுக் கடத்துறுங்கள்! பந்துக்குள்ளை வைச்சுக் கடத்தினது பெரிய சாதனை இல்லையப்பா இந்தக் காலத்திலை...!!

✯ போராளிகளுக்கு மீண்டும் தொலைபேசிகள்

சென்னை, நவ. 10

சென்னையில் உள்ள தமிழ்ப்போராளி அமைப்புக்களின் அலுவலகங்களுக்கு மீண்டும் தொலை

(4ஆம் பக்கம் பார்க்க)

# சாம்பல்தீவில் விடுதலைப்படை வெற்றித் தாக்குதல்

## இராணுவ முகாம் முற்றுகச் சேதம்; சக்திமிக்க ஆயுதங்களை மீட்டு

### சிப்பாய்களின் சடலங்களும் எடுக்கப்பட்டன

யாழ்ப்பாணம், நவம்பர் 11

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சாம்பல்தீவில் மக்கள் விடுதலைப் படையினர் வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை நடத்தி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அந்தத் தாக்குதலில் சாம்பல்தீவு இராணுவ முகாம் முற்றுகச் சேதமடைந்ததாகவும், பல சக்தி மிக்க ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் தாக்குதலில் கலந்துகொண்ட மக்கள் விடுதலைப் படைப் போராளி சுந்தரன் தகவல் தந்தார்.

தாக்குதலில் 13 சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் அவர்களில் எழுவரின் சடலங்களை விடுதலைப்படையினர் எடுத்து வந்து பாலம் ஒன்றில் வைத்து அந்தப் பாலத்தைத் தகர்த்ததாகவும் அந்தப்போராளி மேலும் தெரிவித்தார்.

சாம்பல் தீவுத் தாக்குதலில் கலந்து கொண்டவர்களில் ஒருவரான போராளி சுந்தரன் நேற்றுயாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

அதனைத் தொடர்ந்து நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் பிரஸ்தாப தாக்குதல் குறித்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகள் பரிமாற்றம் நேற்று நடக்கவில்லை

யாழ்ப்பாணம், நவ. 11

எதிர்பார்த்தபடி நேற்று கைதிகள் பரிமாற்றம் இடம்பெறவில்லை.

புலிகளின் மூன்று நிபந்தனைகளை கடந்த ஞாயிறு நடந்த பேச்சுக்களின் போது ஏற்றுக்கொண்ட இராணுவத்தினரிடம் இருந்து நேற்று முழுவதும் கைதிகள் பரிமாற்றம் நடைபெறுவதற்குத் தேவையான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இதன் காரணமாகவே கைதிகள் பரிமாற்றம் இடம்பெறவில்லை.

எனினும் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை கைதிகள் பரிமாற்றம் நடைபெறும் என்று எதிர்பார்த்து ஏராளமான பொதுமக்கள் 'மில்க்பார்' சந்தியில் திரண்டு நின்றனர். (இ-எ-10)

### ரூபா 25,000 யாழ் ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவுக்கு

யாழ்ப்பாணம், நவ. 11

தமிழ் ஈழம் போர் நிதியில் இருந்து 25,000 ரூபா பணத்தை யாழ் ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவுக்கு வழங்க தமிழ் ஈழம் ராணுவம் முன்வந்துள்ளது.

நேற்று நடைபெற்ற முதலாவது சீட்டிழுப்பின் போது இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் ஈழம் போர் நிதிக்கான அதிஷ்டலாபச்சீட்டின் மூலம் பல லட்ச ரூபா கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## புல்மோட்டையில் பொலீஸ்காரர் மரணம்

### தாக்குதலில் வாகனம் கவிழ்ந்தது

திருகோணமலை, நவ. 11

புல்மோட்டையில் பொலீஸார் சென்ற வாகனம் ஒன்றை போராளிகள் நேற்றுத்தாக்கினர்.

அதன் காரணம் வாகனம் கவிழ்ந்து சேதமடைந்தது.

இச்சம்பவத்தில் ஒரு பொலீஸ்காரர் உயிரிழந்தார், 7 பொலீஸார் காயமடைந்தனர்.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

### சுபநேரம்

11-11-1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10.36 முதல் 12.06வரை

ராகுகாலம்:
3.06 முதல் 4.36 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### சுவீப் முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 11

தமிழ் ஈழ இராணுவம் நடத்திய அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நேற்று நல்லூர் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில் நடைபெற்றது.

இச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள் வருமாறு:

முதலாவது பரிசு
ஏ. 130012

இரண்டாவது பரிசு
ஏ. 162151

மூன்றாவது பரிசு:
ஏ. 165716

நான்காவது பரிசு:
ஏ. 184089

ஐந்தாவது பரிசு:
ஏ. 153871

ஆறுதல் பரிசிற்குரிய இலக்கங்கள் வருமாறு:- ஏ. 113913, ஏ. 152351, ஏ. 115763, ஏ. 138874, ஏ. 139069.

# பெரிய புல்லுமலையில் 5 சிப்பாய்கள் பலி!

மட்டக்களப்பு, நவ. 11

பெரிய புல்லுமலை என்ற இடத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து ஸ்ரீலங்கா இராணுவ சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

செங்கலடி — மகாஓயா வீதியில் ரோந்து வந்துகொண்டிருந்த இராணுவச் சிப்பாய்களே நிலக்கண்ணிவெடியில் சிக்கினர். ஐந்து சிப்பாய்களும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். (இ-எ)

## எம்மைப் பிடித்த கடற்படையினர் நல்ல தமிழில் கதைத்தார்கள்

### இழுவைப் படகு உரிமையாளர் பேட்டி

வல்வெட்டித்துறை நவ. 11

கடந்த சனிக்கிழமை அதிகாலை பொலிகண்டி கடலில் வழமைபோல் மீன்பிடித்துக் கொண்டிருந்த எம்மைச் சுற்றி வளைத்த கடற்படையினர் எம்முடன் நல்ல தமிழில் அழகாகக் கதைத்தனர். அத்துடன் தமக்கு உதவி செய்தால் மட்டுமே தொடர்ந்தும் மீன் பிடிக்க எமக்கு அனுமதி வழங்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்வாறு உதயன் வல்வைச் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் தமது அதிர்ச்சி தரும் அனுபவம் பற்றி 'கோடிமாரி' இழுவைப்படகு உரிமையாளர் திரு. கனகசபை சபாரத்தினம் விபரித்தார்:-

அவர் தெரிவித்ததாவது:-

கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 3-30 மணி அளவில் பொலிகண்டிக்கும் ஊரணிக்கும் இடையில் எமது இழுவைப் படகான கோடி மாரியில் வழமைபோல் மீன் பிடித்துக் கொண்டிருந்தோம்.

அப்போது வானில் ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டது. ஹெலிக்கொப்டர் மிகவும் தாழ்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ரிக்கெட் விற்பனை ஆரம்பம்

யாழ்ப்பாணம் நவ. 11

இரண்டாவது சுற்று தமிழ் ஈழ போர் நிதிக்கான அதிஷ்ட லாபச் சீட்டு நேற்று முதல் விற்பனைக்கு வந்தது.

இதற்கான முதலாவது சீட்டினை வடமாகாண தமிழ் ஈழ இராணுவ பொறுப்பாளரான திரு. நந்தன் விநியோகித்தார்.

இரண்டாவது சுற்று சீட்டிழுப்பில் முதற் பரிசாக 50 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 25 ஆயிரம் ரூபாவும், மூன்றும் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும், நான்காம் பரிசாக 7,500 ரூபாவும் வழங்கப்படும். 82 ஆறுதல் பரிசில்க

(4ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் வங்கி:

## நவீன சந்தைக் கிளையை மூட வேண்டாம்

### மாநகர ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம் நவ. 11

மக்கள் வங்கியின் யாழ் நவீன சந்தைக் கிளையை மூட வேண்டாம்

இப்படி யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரைக் கேட்டிருக்கின்றார்.

மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளருக்கு எழுதிய கடிதத்தில் மாநகர ஆணையாளர் தெரிவித்திருப்பதாவது:

நவீன சந்தைக் கிளையை மூடுவதற்குத் தீர்மானித்து இருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

சந்தைப் பகுதியில் இக்கிளை இருக்கிறது. இதனால் சந்தைப் பகுதி மக்கள் நன்மை அடைகின்றனர். இது குறித்து மாநகர சபைக்கும் பொறுப்பு ஒன்று உண்டு.

இக்கிளை மூடப்படலாம் என்று அச்சம் தெரிவித்து பல வர்த்தகர்கள் என்னிடம் முறையிட்டிருக்கின்றனர்.

எந்தக் காரணம் கொண்டும் இக்கிளையை

(4ஆம் பக்கம் பார்க்க)

### செய்திச் சாரம்

#### பஸ் குடைசாய்ந்தது

யாழ்ப்பாணம், நவ 11

யாழ்ப்பாணத்தில் நேற்று இரண்டு தனியார் மினி பஸ்கள் மோதுண்டன ஒரு பஸ் குடைசாய்ந்தது.

நேற்றுக்காலை 6. 30 மணி அளவில் ஆரிய குளத்தடியில் இச் சம்பவம் நடந்தது.

கொழும்பு சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் யாழ் நகர் வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றுமே மோதிக் கொண்டன.

குடை சாய்ந்த பஸ்ஸில் பிரயாணிகள் எவரும் இருக்கவில்லை.

சாரதியும் நடத்துநரும் காயம் எதுவும் இன்றித் தப்பினர் (இ-10)

#### ★ ராஜராஜ சோழனின் பிறந்த தினவிழா

சென்னை, நவ. 10

ராஜராஜ சோழனின் 1001 ஆவது பிறந்ததின விழா நேற்று (திங்கள்) தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் ஆரம்பமானது.

ராஜராஜ சோழன் கட்டிய இந்த ஆலயத்தின் மூர்த்தியான பிரகதீஸ்வரருக்கு மகா அபிஷேகம் செய்யப்பட்டது.

ஆலய நுழை வாயிலில் உள்ள ராஜராஜ சோழனின் திருவுருவத்துக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ஏழைகளுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது. (இ-எ)

#### நெரிசலில் 50 பேர் பலி

புதுடில்லி, நவ. 10

உத்தரபிரதேசத்தில் அயோத்தி என்ற இடத்தில் ஸ்ரீராமர் ஆலயத்தில் இன்று நடந்த உற்சவம் ஒன்றில் ஏற்பட்ட சனநெருக்கடியில் 50 பக்தர்கள் வரை உயிரிழந்திருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

32 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. 16 பேர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

உயிரிழந்தோரில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளும் ஆவர். (இ-எ)

#### வீடுகளில் தங்கும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், நவ. 11

திருமலை மாவட்டத்தில் உள்ள பல இராணுவ முகாம்களில் இருக்கும் சிப்பாய்கள் இரவு நேரங்களில் பொதுமக்களின் வீடுகளிலேயே வந்து தங்குகிறார்கள்.

பகல் நேரங்களில் வீடுகளிலும் வீதிகளிலும் சோதனையிடும் சிப்பாய்கள் இரவு நேரங்களில் முகாம்களை விட்டு வெளியேறி பொதுமக்கள் வாழும் பகுதிகளில் உட்புகுந்து தங்கி வருகிறார்கள்.

இதன் காரணமாகப் பல பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி அகதிகளாக முல்லைத்தீவுப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர். (இ-10)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் தாழ்த்திப் பெய்த மழையால்

# பல இடங்களில் இம்முறை நெற் செய்கை இல்லை

## கிளிநொச்சி உதவி விவசாய பணிப்பாளர் கவலை

கிளிநொச்சி, நவ. 11
கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறைகாலம் தாழ்த்திப் பெய்த மழையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை. நெற் செய்கை மேற்கொள்ளப்படும் சுமார் 60 ஆயிரம் ஏக்கரில் நாற்பது சத வீதத்தில் கூட நெற்செய்கை மேற்கொள்ளப்படாதிருப்பது மிகவும் கவலை தருகிறது.

கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திரு. எஸ். ரி. பத்மநாதன் பிரத்தியேக பேட்டி ஒன்றின் போது 'உதயன்' செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:- கிளிநொச்சி மக்களின் உப உணவுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் பல்வேறு இன்னல்களின் மத்தியிலும் நாம் எடுத்துக்கொண்ட முயற்சியால் விதைநெல், மற்றும் விதை தானியங்கள் தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.

தருவிக்கப்பட்ட பி. ஜி. 34—6 விதை நெல் மற்றும் மிளகாய் விதைகள், குரக்கன், கௌபி, பயறு, உழுந்து, எள்ளு, சோயா போன்ற உப உணவு விதைத்தானியங்கள் தற்போது வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் உள்ள விவசாயப் பணிப்பாளரின் தற்காலிக அலுவலகத்தில் வைத்து விவசாயிகளுக்கு விநியோகித்து வரப்படுகின்றன.

இவற்றினை விவசாயிகள் காலம் தாழ்த்தாது உடன் சென்று பெற்று தமது பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம்.

உப உணவுப் பயிர்ச் செய்கை என்றதும் கூடுதலானோர் மிளகாய்ச் செய்கையையே மேற்கொள்கின்றனர்.

அந்த நிலை மாறி எமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய கௌபி, பயறு, உழுந்து, குரக்கன் நிலக்கடலை, சோயா போன்ற ஏனைய தானியவகைகளைப் பயிரிட்டு அவற்றில் தன்னிறைவு காண்பதற்கு முன்வர வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-76)

## செய்திக்கொத்து

### கமத்தொழில் விளக்கம்

கிளிநொச்சி, நவ. 11
கமத்தொழில் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டு வந்த கமத்தொழில் விளக்கம் (தமிழ் சஞ்சிகை) கடந்த 83 ஆம் ஆண்டுடன் தடைப்பட்டுள்ளது.

இதனை மீண்டும் பெற்று விவசாயிகளதும் விவசாயம் கற்கும் மாணவர்களதும் அறிவைப் பெருக்கிட கிளிநொச்சி உதவி விவசாய விரிவாக்கம் அலுவலகம் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. (இ-76)

### கண்டனம்

மட்டக்களப்பு, நவ. 11
மட்டக்களப்பு – திருமலை ஆயர் உட்பட கத்தோலிக்க மதகுருமார் ஆயுதப்படையினரால் வழிமறிக்கப்பட்டு ஆயுத முனையில் அவமதிக்கப்பட்ட செயல் குறித்து பிரசைகள் குழு தனது வன்மையான கண்டனத்தை தெரிவிக்கிறது.

படையினரின் இச் செயல் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்.

மேற்படி தீர்மானங்கள் மட்டக்களப்பு பிரசைகள் குழுவின் கூட்டத்தால் எடுக்கப்பட்டது. (இ-21)

### பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், நவ. 11
கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் உப அதிபராகக் கடமை ஆற்றி ஓய்வுபெற்ற சுகிர்தபாஸ்கரி செல்லத்துரைக்கு அண்மையில் கலாசாலை அதிபர் செல்வி ச. சின்னப்பூ தலைமையில் பிரிவுபசார வைபவம் நடைபெற்றது.

அதிபர் பேசுகையில் அன்னாரின் சேவைகளைப் பாராட்டினார்.

இளைப்பாறிய உப அதிபர் சுகிர்தபாஸ்கரி செல்லத்துரை பேசுகையில், கலாசாலையின் சேவையிலிருந்து தாம் ஓய்வு பெற்றாலும் கலாசாலை வளர்ச்சிக்கு என்றும் ஒத்துழைப்பு நல்குவேன் என்றார். (இ)

### மேட்டு நில வெங்காயச் செய்கை பாதிப்பு

அச்சுவேலி, நவ. 11
அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் மேட்டு நில வெங்காயச் செய்கை பெருமளவில் பாதிப்படைந்துள்ளது.

கிணற்று நீர்ப்பாசனம் இல்லாமல் மாரி மழையை நம்பி இந்த வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

சில இடங்களில் வெள்ளம் நிலமட்டத்திற்கு மேல் தேங்கி நின்றதே மேட்டு நில வெங்காயச் செய்கை பாதிக்கப்படக் காரணம் ஆகும். (இ-11)

### ஆகாய தாக்குதல் நிறுத்தக் கோரிக்கை

மட்டக்களப்பு, நவ. 11
மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் ஆகாயத்தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென பிரசைகள்குழு ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

குழுவின் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து இதுதொடர்பாக அனுப்பி வைத்துள்ள தந்தியில் இதனை வலியுறுத்தியுள்ளார். (இ-21)

### அத்துலத் திருப்தி ஆச்சரியம்

கொழும்பு, நவ. 11
தமிழ் நாட்டில் தமிழ் போராளிகள் மீது சென்னை பொலிஸார் நடவடிக்கை எடுத்திருப்பது குறித்து தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி திருப்தியும் ஆச்சரியமும் தெரிவித்தார். (இ-எ)


GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
எமது பிரயாணமுகவர் அழைத்துச் செல்வர்.

டென்மார்க், கனடா செல்வதற்கு
உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்



பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

குவைத்திற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள் 15ஆம் திகதிக்கு முன் தொடர் கொள்ளவும்.

தொடர்பு:
N.பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

* தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.
* எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.


## இன்று பரிசளிப்பு

பலாலி, நவ. 11
கோப்பாய்க் கல்வி வட்டாரத்தில் கல்வித் துறையில் சாதனை நிலை நாட்டியவர்கள் பரிசு பெறவுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை வட்டாரப் பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மத்தியில் வைத்து இப்பரிசளிப்பு நடைபெறும்.

வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில் பிரதமகல்வி அதிகாரிகள் திரு. வி. தங்கராசா, திரு. கந்தசாமி, திரு. தே. குலசேகரம், வட்டாரக்கல்வி அதிகாரி பொன் கணேசன் ஆகியோர் கலந்து கொள்ளும் இந்த வைபவத்தில் மாணவர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோர் பரிசுகளைப் பெறுவர். (இ-119)

## கிளிநொச்சிப் பகுதி மாணவர் பலர் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலைமை

கிளிநொச்சி, நவ. 11
கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள அசம்பாவிதத்தால் பாதிக்கப்பட்ட பல மாணவர்கள் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் இப் பரீட்சைக்கு பரீட்சை திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரி இருந்தது.

அவ்வேளையில் கிளிநொச்சி நகரப் பாடசாலைகள் சில பூரணமாக இயங்க முடியாத நிலையில் இருந்தன. அத்துடன் கிளிநொச்சி அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மாணவர்கள் தங்கள் பாடசாலைகளுக்குத் திரும்பாதிருந்தனர்.

பின்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டதனை அறிந்த மாணவர்கள் தமது பாடசாலைகளுக்கு வந்து விண்ணப்பித்தனர்.

ஆனால் சிலர் நேரகாலத்துக்கு தமது உரிய பாடசாலைகளுக்கு வந்து சேர முடியவில்லை. இறுதி நேரத்தில் வந்து சேர்ந்த இரண்டாம்முறைதோற்றும் சில மாணவர்களால் தமது பரீட்சைக் கட்டணத்தை தபால் கந்தோரில் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

காரணம் விண்ணப்ப திகதி நீடிப்பு கிளிநொச்சி தபாலகத்திற்கு சட்டப்படி அறிவிக்கப் படாமையால் அங்கு அவர்கள் பற்றுச் சீட்டினை கொடுக்க மறுத்தனர்.

இன்நிலையில் இம்முறை ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய பல மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலை எழுந்துள்ளது. (இ-76)

## விஜிதரன் விவகாரம்: வெளிவாரிப் பட்டதாரி மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 11
யாழ் பல்கலைக்கழக 3ஆம் வருட வர்த்தக மாணவன் விஜிதரன் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டதை இலங்கைத் தமிழ் வெளிவாரி பட்டதாரிகள், மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது சம்பந்தமாக ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

ஈழப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகையில் இது போன்ற நடவடிக்கைகள் அதனை மழுங்கடிப்பதோடு எதிரிக்கு சாதகமான நிலையையும் தோற்றுவித்து விடும்.

யாழ் குடாநாடு இன்று போராளிகள் வசம் உள்ளது.

இம்மாணவன் கடத்தப்பட்டதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என அறிக்கை விடுவதோடு அவர்களின் பொறுப்பு குறைந்து விடவில்லை.

நமது கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்தில் கடத்தப்பட்ட இம் மாணவனை கண்டுபிடித்து ஒப்படைக்க வேண்டியது அவர்களது கடமை ஆகும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## தமிழ் சிறுவர் தினம்

யாழ்ப்பாணம், நவ. 11
அறவழிப் போராட்டக் குழுவினரின் ஏற்பாட்டில் தமிழ் சிறுவர் தினம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்படும்.

சிறுவர்களுக்கான ஊர்வலம், பொதுக்கூட்டம், கலைநிகழ்ச்சிகள், பிரார்த்தனைபோஷாக்கு விருந்து ஆகியனவும் சிறுவரை உளரீதியாக மகிழ்விக்கும் பல நிகழ்ச்சிகளும் நடைபெற அறவழிப் போராட்டக்குழு ஏற்பாடுசெய்துள்ளது. (ஓ)

## பணிப்பாளர் கூறுகிறார்: பணயக் கைதி நிலையில் இல்லாது மாணவர் நிலையில் கல்வி பெற நடவடிக்கை எடுப்பேன்

யாழ்ப்பாணம், நம, 11
மாணவர்கள் பணயக் கைதிகள் நிலையிலில்லாது; மாணவர் நிலையிலிருந்து கல்வி கற்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுக்க நான் முன்னிற்பேன்.

யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்கள் நடத்திய மௌன ஊர்வலத்தின்போது மாணவர்களால் மகஜர் ஒன்று பணிப்பாளரிடம் கல்வித் திணைக்களத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக் கொண்டு உரையாற்றுகையிலேயே பணிப்பாளர் இவ்வாறு சொன்னார்.

அவர் வேலும் பேசுகையில்; இன்றைய மாணவனின் போராட்டம் மாணவ உலகுக்குமட்டுமல்ல அனைத்து மக்களுக்கும் எழுச்சி தருவதாகும்.

மாணவர்கள் பெரும் சோதனைகள் மத்தியிலும் மனம் சோராது படிக்க வேண்டும். யாழ் மத்திய கல்லூரி தொடர்ந்து இயங்க வேண்டும் என்பதே எனது அவா ஆகும்.

விபுலின் மறைவு மாணவ சமூகத்துக்கே ஒரு பேரிழப்பாகும். மாணவர்களின் போராட்டங்களுக்கு எமது ஆதரவு என்றும் உண்டு.

இவ்வாறு அவர் கூறினார். (இ.5)

## அச்சுவேலி அபி. சபை உப அலுவலக மின்சார விநியோகம் விஸ்தரிப்பு

அச்சுவேலி, நவ. 11
அச்சுவேலி அபிவிருத்திச்சபை உபஅலுவலகப் பகுதிக்கான மின்சார விநியோகம் விஸ்தரிக்கப் படவுள்ளது.

மின்விஸ்தரிப்பு நடவடிக்கையை அடுத்து மேலும் இரண்டு உபமின்சார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

மொத்தம் 6 லட்சத்து 55 ஆயிரம் ரூபா செலவில் அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் ஒன்றும் கதிரிப்பாய் பாலசுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு அருகில் ஒன்றுமாக இரண்டு உப மின்சார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கடந்தவருடம் 15 வீதிகளுக்கு மின்சார இணைப்பு வேலைகள் செய்யப் பட்டுள்ளன.

இந்தவருடம் காட்டுமலைக் கந்தசாமிகோயில் வீதி, வல்லைவீதி, காட்டு வேம்படிவீதி, பத்தமேனி பிள்ளையார் கோவில் வீதி, இடைக்காடு சாமிக்கலட்டி நில்பிட்டி ஒழுங்கை ஆகிய ஐந்து வீதிகளுக்கும் மின் இணைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

புதிய மின் இணைப்பு வேலைகள் நடைபெறுவதால் இதுவரையும் மின்சாரவசதியைப் பெறாமல் இருந்துவந்த பகுதிகள் மின்சார வசதியைப் பெறுகின்றன. (இ-11)

## மக்கள் முகம்

### காந்தி சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், நவ. 11
காந்தி சனசமூக நிலையத்தின் நடப்பு வருட புதிய நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு நிலையத்தின் தலைவர் திரு. க. நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

காப்பாளர்: திரு. மா. துரைராஜா. தலைவர்: திரு. கி. தியாகராசா. செயலாளர்: திரு. மா. பன்னீர்ச்செல்வம், பொருளாளர்: திரு. அ. தங்கராசா, உபதலைவர்: திரு. மா. உதயரத்தினம், உபசெயலாளர்: திரு. வே. புவனேஸ்வரன், உபபொருளாளர்: திரு. ந. இராசேஸ்வரன்.
கணக்காய்வகளர்கள்: திரு. அ. ஸ்ரீராசா, திரு. க. மகேந்திரம், திரு. சி. சிவனேஸ்வரன்.

பத்துப்பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். (இ)

### திறப்பு விழா

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகக் கட்டடத் திறப்புவிழா நாளை புதன்கிழமைகாலை10–30 மணிக்கு நடைபெறும்.

சங்கத்தின் தலைவர் திரு. தி. கமலநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் கட்டடத் திறப்பு விழாவில் மக்கள் வங்கி வட பிராந்திய முகாமையாளர், கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்கள், மக்கள்வங்கி சுன்னாகம் முகாமையாளர் உட்பட மற்றும் பலரும் கலந்துகொள்கின்றனர். (இ-11)

### ஆயிரம் பொலீஸார்

கொழும்பு, நவ. 11
இராணுவப் பயிற்சி பெற்ற 1,000 பொலீஸார் பயிற்சியை முடித்துக் கொண்டு இந்த வாரம் வெளியேறுகின்றனர்.

இம்மாதம் 12 ஆம் திகதி மரதம்பையிலும் 8ஆம்திகதி அக்குரம்பொடவிலும் பயிற்சி முடிந்து வெளியேறும் வைபவம் நடைபெறும். (இ-எ)

## வலைபந்தாட்டம்: இன்று 2 ஆம் நாள் போட்டிகள் நடைபெறும்

யாழ்ப்பாணம், நவ. 11
மாணவர் முன்னணி நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டிகள் இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

'அ' பிரிவில் நடைபெறும் இன்றைய போட்டிகளில் சுண்டுக்குளி மகளிர் பாடசாலை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, விக்கினேஸ்வராக் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தா, அத்தியார் இந்துக் கல்லூரி. யாழ் இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, யாழ் கன்னியர் மடம் (தமிழ்) வேம்படி பெண்கள் பாடசாலை ஆகியவை பங்கு பற்றுகின்றன.

போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி திடல்களில் காலை 8 30 மணி தொடக்கம் பிற்பகல் 2.45 மணி வரை நடைபெறும்.

இன்றைய போட்டிகளில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு எதிராக விக்கினேஸ்வராக் கல்லூரியும் —

மானிப்பாய் மெமோறியல் பாடசாலைக்கு எதிராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் —

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தாவுக்கு எதிராக அத்தியார் இந்துக் கல்லூரியும் —

யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு எதிராக சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் —

கரவெட்டி திரு இருதயக் கல்லூரிக்கு எதிராக புத்தூர் சேமஸ்ரந்தாக் கல்லூரியும் —

வட இந்து மகளிர் கல்லூரிக்கு எதிராக யாழ் கன்னியர் மடம் (தமிழ்) மோதுகின்றன.

வெற்றி பெற்ற கல்லூரிகளுடனான மோதல்களில் சுண்டுக்குளி மகளிர் பாடசாலை வேம்படி பெண்கள் பாடசாலை ஆகியவையும் ஈடுபடும். (இ)

## வேலணை கல்வி வட்டாரத்தில் படகு இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறி

கரவெட்டி, நவ. 11
வேலணைக் கல்வி வட்டாரப் பாடசாலைகளில் படகு, இயந்திரங்கள் திருத்துவதற்கான பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படும்.

1987 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைய இது அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

வேலணைப் பகுதியில் பலர் மீன்பிடித்தொழிலை மேற்கொள்வதினால் இப் பயிற்சி பலன் அளிக்கும் என்று நம்பப்படுகிறது.

மீன்பிடித் தொழிலாளர்கள் பழுதுபட்ட தமது படகு இயந்திரங்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதில் ஏற்படும் சிரமத்தை இப்பயிற்சி நெறிமூலம் ஓரளவு பூர்த்தி செய்ய முடியும் என வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன் தெரிவித்தார். (இ-70)


மலிவு விற்பனை

50 இரும்புக் கதிரைகள் Ahuja Transister Megaphone Model AM 18 12 vde 8 cells Excellent Condition ரோச்பற்ரறியில் இயங்கும் ஒலிபெருக்கி இன்னும் பல உங்கள் தேவைகள் எவையானாலும் வாங்கவும்! விற்கவும் எம்மிடம் வாருங்கள் ஏலவிற்பனை நிலையம் சந்திக்கருகாமையில கோப்பாய்.



உற்பத்தி முகாமையாளர் பதவி பயிற்சிநெறி விண்ணப்பம்

மேற்படி பதவிக்கான வயது எல்லை 25 -- 35 என்பதிலிருந்து 20 -- 30 ஆக மாற்றப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 'உதயன்' 30-10-86ம் திகதிய விளம்பரத்தைப்பார்க்கவும்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை.



COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
புதிய வகுப்புகள் ஆரம்பம்
14-11-84:- தி/பு/வெ வகுப்புகள் 2 மாதம்
15-11-86:- ச/ஞா வகுப்புகள் 3 மாதம்
மொத்தக் கட்டணம் ரூ. 750/- மட்டும்.
சேரும்பொழுது செலுத்த வேண்டியது 500/- மட்டும்.
ஒவ்வொரு மாணவருக்கும் சிறந்த கம்பியூட்டர் பயிற்சி அளிக்கப்படும்.
Uniko Computer Centre
(சுதுமலை சந்தி)
282, யாழ்ப்பாணம் றோட், மானிப்பாய்.



அழைக்கின்றோம்

எமது மகள்
செல்வி கலைவாணிக்கு
மங்கலப் பூப்பு நீராட்டு விழா
12 - 11 - 86 புதன்கிழமையன்று
காலை 9.00 மணி முதல் 11.00 மணி
வரையும் உள்ள தனுலக்கின சுப வேளையில்
எமது சுருவில் இல்லத்தில்
நிகழவுள்ளதால்
தங்கள் வரவையும் தயவுடன்
விரும்புகின்றோம்.

இங்ஙனம்,
தம்பையா பாலசுந்தரமும்
தவைி புவனேஸ்வரியும்.

சுருவில்,
ஊர்காவற்றுறை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

பிறர் வாழ வாழ்வாரே வாழ்வார்! மற்றவர்கள் எல்லாம் உயிர் இருந்தும் செத்தவர்களே.

— சுவாமி விவேகானந்தர்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - ஒருமைப்பாடு

இல. 15, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24805, 22073

11-11-1986 த. பெ. இல. 23


## விஜிதரன் விவகாரம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவன் அருணகிரிநாதன் விஜிதரனைக் கடந்த ஒரு வார காலமாகக் காணவில்லை.

அவர் அரசியல் காரணங்களுக்காகக் கடத்தப்பட்டாரா? அல்லது தனிப்பட்ட கோபம் காரணமாக ஒரு குழுவினரால் கடத்தப்பட்டாரா? அல்லது காணமற் போய்விட்டாரா?

இந்த மூன்றில் எது நடந்தது என்பது நிர்ணயிக்க முடியாத ஒரு நிலை ஆரம்பத்தில் இருந்தது. இவர் அரசியல் காரணங்களுக்காகக் கடத்தப்படவில்லை என்று இப்போது ஊகிக்க வேண்டி உள்ளது. காரணம்: இவர் காணமற் போனதற்கும் தமக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்று யாழ்ப்பாணத்தில் இயங்கும் விடுதலை அமைப்புகள் யாவும் அறிவித்துவிட்டன.

அவ்வாறாயின் அவர் தனிப்பட்ட காரணங்களுக்காக ஒரு குழுவினரால் கடத்தப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல் தாமாகத் தமது தங்குமிடத்திலிருந்து புறப்பட்டு எங்காவது சென்றிருக்க வேண்டும். இல்லையேல் ஒரு சிலரின் பயமுறுத்தலுக்கு அஞ்சி மறைந்து வாழ வேண்டும்.

இதில் எது நடந்திருந்தாலும் அது யாழ்ப்பாணத்துக்கு இழுக்கு. ஏனெனில் விஜிதரன் மட்டக்களப்பில் இருந்து தமது உயர் கல்வியைப் பெறுவதற்காக இங்கு வந்தவர்.

ஆகவே அவரது மர்ம மறைவுக்கு எது காரணம் என்று ஆராய்வதற்கு இது தருணமல்ல. அவரைக் கண்டுபிடிப்பதே இப்போது உள்ள முக்கிய பணி.

சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் தூர்ந்து போயிருக்கும் இவ்வேளையில், கண்டுபிடிக்கும் பணி பெருமளவில் விடுதலை இயக்கங்களையே சாரும்.

தமக்கும் விஜிதரன் காணமற் போனதற்கும் சம்பந்தமில்லை என்று அறிக்கை விட்டதோடு தமது கடமை முடிந்துவிட்டதாக விடுதலை இயக்கங்கள் கருதி விடக்கூடாது. விஜிதரனைக் கண்டு பிடிப்பது தமது தார்மீகப் பொறுப்பு என்பதனை அவை மனதிற் கொள்ள வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இது சம்பந்தமாகத் தெரிவித்த கருத்துக்களை எல்லோரும் ஏற்றுக் கொள்வர்.

காணமற் போனவர்கள் கண்டுபிடிக்கப்பட முடியாமல் இருப்பது எமது பல்கலைக்கழகத்துக்கு மட்டும் அல்ல. எமது சமூகத்துக்கும் இழிவான நிலையை ஏற்படுத்தும் —

விஜிதரனைக் கண்டுபிடிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் இல்லாவிடில் பல விபரீத விளைவுகள், சச்சரவுகள் உண்டாகி உயர் கல்விக்கு மட்டுமன்றி, பொதுமக்கள் வாழ்க்கைக்கும் பாதிப்பு ஏற்படுத்தும்— இவ்வாறு உபவேந்தர் எச்சரிக்கிறார். அவை அத்தனையும் வரிக்குவரி, சொல்லுக்குச் சொல்லு உண்மை; அர்த்தமுள்ளவை.

விஜிதரன் கண்டுபிடிக்கப்படவில்லை என்றால் யாழ். பல்கலைக்கழக மாணவருக்கு பாதுகாப்பில்லை என்றாகிவிடும். அது மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்பதற்குச் சமமாகிவிடும். மொத்தத்தில் மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலையைத் தோற்றுவிக்கும்.

இராணுவத்திடம் இருந்து மட்டும் மக்களைப் பாதுகாத்தால் போதுமா? மக்களிடையே உள்ள தீய சக்திகளிடம் இருந்தும் அவர்களைக் காப்பாற்ற வேண்டும். இல்லையேல் மக்கள் மனதில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்ற உணர்வும் அச்ச உணர்வும் உண்டாகிவிடும். அவை சமூகப் பாதுகாப்புக்கு ஒவ்வாதவை. நிச்சயம் நீக்கப்படவேண்டியவை.

விஜிதரன் விடயத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டிய அவசியமும், அவசரமும் உண்டு.

அவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவராக இருப்பதால் அதனை வைத்துத் தமிழர்களைப் பிராந்திய ரீதியில் பிளவுபடுத்த அரசினரும் அதன் அதிகாரிகளும் நிச்சயம் சதி செய்வர். தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைக்க இதனை விஷவித்தாகப் பாவிப்பர். இல்லாத விடயங்களைக் கற்பனை செய்து யாழ்ப்பாணத்தவரையும் மட்டக்களப்பு மக்களையும் பிரிப்பதற்காக அரசு ஏற்கனவே 'ஹெலிப்' பிரசுரப் பிரசாரம் செய்வதை மறந்து விடலாகாது.

பொது எதிரிக்கு எதிராக ஒரே அணி நின்று போராட வேண்டிய இக்காலத்தில் எமக்கிடையே பிளவுகளும், சச்சரவுகளும் தோன்றுமாயின் அது எங்களுக்குத் தோல்வியைத் தேடித் தரலாம்.

ஆகவே விஜிதரனைக் கண்டு பிடிப்பதில் விடுதலை இயக்கங்கள் மட்டுமன்றி பொது ஸ்தாபனங்களும், சமூக நல இயக்கங்களும், தனி மனிதர்களும் ஒன்று சேர்ந்து செயற்படுவது பிரதானமாகும். பத்திரிகைகளுக்கு அறிக்கைகளை மட்டும் விடுவதால் ஆக்கபூர்வமாக எதுவும் நடக்காது. மனமார்ந்த செயற்பாடே முதலில் தேவை.

## இமாலய வளங்கள் பாதுகாப்பு

வாஷிங்டன், நவ. 10

இமாலய மலைச்சாரலில் உள்ள வளங்களைக் காப்பாற்றும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த ஐ. நா. சூழல் பாதுகாப்பு ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இமாலய அடிவாரத்தில் உள்ள பூட்டான், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளின் மக்கள் பங்குபற்றக் கூடியதாக இத்திட்டம் தயாரிக்கப்படவிருக்கின்றது.

இமாலய அடிவாரத்தில் மரங்களை அழிப்பதன் மூலம் வளங்கள் அழிக்கப்படுவதைத்தடுப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். (இ-எ)

றேகனுடன் கருத்து முரண்பாடு:

# ராஜினமா செய்திக்கு ஷுல்ட்ஸ் மறுப்பு

வாஷிங்டன், நவ. 10

அமெரிக்க அதிபர் றேகனுடன் ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை காரணமாக தான் வெளிநாட்டமைச்சர் பதவியை ராஜினமாச் செய்யப் போவதாகக் கூறும் பத்திரிகைச் செய்திகளை திரு ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் மறுத்திருக்கின்றார்.

ஈரானின் பணயக் கைதிகளாக வைக்கப்பட்ட இரண்டு அமெரிக்கர்களை விடுவிப்பதற்காக ஒரு கப்பல் நிறைந்த ஆயுதங்களை ஈரானுக்கு அனுப்பி வைக்கும் உடன்பாடு ஒன்றுக்குச் சாதகமாக அதிபர் றேகன் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதற்கு வெளிநாட்டமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்.

இதன் காரணமாக அதிபருக்கும் அமைச்சருக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு உள்ளன.

இதன் எதிரொலியாக திரு. ஷுல்ட்ஸ் அமைச்சர் பதவியை ராஜினமாச் செய்யப்போவதாக அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

அச்செய்திகளையே திரு. ஷுல்ட்ஸ் தற்போது மறுத்திருக்கிறார். (இ-எ)

## 'சார்க்' மாநாட்டுக்கு பெங்களூர் தயாராகிறது

பெங்களூர், நவ.10

'சார்க்' (தெற்காசிய நாடுகள்) உச்சி மாநாட்டுக்கு பெங்களூர் தயாராகிறது.

மாநில சட்டசபைக் கட்டடத்தில் உள்ள 'விதான சௌதா' மண்டபத்தில் உச்சிமாநாடு நடைபெறும்.

இம்மாதம் 12 ஆம் திகதி ஏழு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் பெங்களூர் சென்றடைவர்.

இம்மாதம் 13, 14, 15 ஆம் திகதிகள் வரை வெளிநாட்டமைச்சர்களின் கூட்டம் இடம் பெறும்.

நாடுகளின் தலைவர்கள் இம்மாதம் 15 ஆம் திகதி பெங்களூர் வந்து சேர்வர்.

இம்மாதம் 16 ஆம் திகதி காலை 9 மணியளவில் தலைவர்களின் உச்சிமாநாடு ஆரம்பமாகும்.

17 ஆம் திகதி காலை 'விதான சௌதா' மண்டபத்தில் உச்சி மாநாடு நிறைவுபெறும்.

இம்மாநாட்டுக்காக இந்திய மத்திய அரசு 2 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பெங்களூர் பௌரிங் ஆஸ்பத்திரி 20 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## சீன அமைச்சர் பதவிக்கு ஆபத்து

கோலாலம்பூர், நவ.10

மலாய் இனத்தின் அந்தஸ்து என்ன என்பது பற்றி கேள்வி எழுப்பிய சீனஅமைச்சரை பதவி நீக்கம் செய்யும்படி மலேசியப் பிரதமருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆளும்கட்சிக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் மலாய்க்கட்சியே பிரதமர் மஹதிர் முகமதுவுக்கு இந்த வேண்டுகோளை விதித்திருக்கிறது. (இ-எ)

## குஞ்சரப் கணவாய் மூடப்படும்

இஸ்லாமாபாத், நவ.10

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பகுதியையும் சீனவையும் இணைக்கும் குஞ்சரப் கணவாய் இம்மாதம் 30 ஆம் திகதியில் இருந்து மூடப்பட்டு இருக்கும் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது. (இ-எ)

## நட்சத்திரப் போர் திட்டத்தில் பங்கு பற்ற 545 விஞ்ஞானிகள் மறுப்பு

லண்டன், நவ. 10

அமெரிக்க நட்சத்திரப் போர்த் திட்டத்தில் பங்கு பற்றுவதில்லை என்று 545 பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தீர்மானித்து உள்ளனர்.

இத்திட்டம் சம்பந்தமான ஆராய்ச்சியில் பங்குபற்றுவதில்லை; பணம் பெறுவதில்லை என்று இந்த விஞ்ஞானிகள் முடிவு செய்திருக்கின்றனர்.

இந்த விஞ்ஞானிகளில் நோபல் பரிசு பெற்ற மூன்று விஞ்ஞானிகளும் அடங்குகின்றனர். (இ-எ)

## ராஜீவ் கேட்டால் ராஜினமா செய்வேன்

### கமலபதி திரிபாதி சொல்கிறார்

புதுடில்லி, நவ. 10

இந்திரா காங்கிரஸ் செயல்தலைவர் பதவியில் இருந்து வலிந்து நான் ராஜினமாச் செய்ய மாட்டேன்.

பிரதமர் ராஜீவ்காந்தி கேட்டால் மட்டுமே நான் தலைவர் பதவியில் இருந்து விலகுவேன்-

இப்படி இந்திரா காங்கிரஸில் பிரச்சினைக்குரியவராக விளங்கும் திரு. கமலபதி திரிபாதி தெரிவித்திருக்கிறார்.

இந்திரா காங்கிரஸ் கட்சியை புனரமைப்புச் செய்வதற்கு நான் முட்டுக்கட்டையாக இருக்கவில்லை. அப்படி முட்டுக்கட்டையாக இருக்கிறேன் என்று பிரதமர் காந்தி நினைப்பதாக நான் அறிந்தால் உடனே பதவியை ராஜினமாச்செய்து விடுவேன்.

இப்படி திரு. கமலபதி திரிபாதி தெரிவித்தார். (இ-எ)

## மேன்மை தங்கிய அடைமொழி துறந்த மன்னர்

ஜெத்தா, நவ. 10

'மேன்மை தங்கிய' அரசர் என்று சவூதி மன்னர் பாஹ்த் இனிமேல் அழைக்கப் படமாட்டார்.

'மேன்மை தங்கிய' என்ற அடைமொழியை தான் துறந்து விட்டதாக மெதினா நகரில் வைத்து அண்மையில் அவர் அறிவித்தார்.

இஸ்லாம் 14 நூற்றாண்டுகளுக்கு முன்னர் மெதினாவிற் தோன்றியது.

'மேன்மை தங்கிய' என்ற அடைமொழிக்கு பதிலாக 'புனித தலங்களான மெக்கா, மெதினா ஆகியவற்றின் ஊழியன்' என்ற அடைமொழியுடனே தான் அழைக்கப் படவேண்டும் என்று சவூதி அரசர் பாஹ்த் அறிவித்திருக்கிறார். (இ-எ)

### வெளி உலகில்

## இருதய மாற்றுச் சிகிச்சைத் தடை ரஷ்யாவில் நீக்கம்

மாஸ்கோ, நவ. 10

இருதயமாற்றுச் சிகிச்சை மீது விதித்திருந்த 20 ஆண்டு காலத் தடையை ரஷ்யா நீக்கியது.

இறந்த ஒருவருடைய இருதயத்தை எடுக்காமல் இறந்துகொண்டிருக்கிற ஒருவருடைய இருதயமே இருதய மாற்றுச் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படுகிறது என்ற காரணத்தைக்காட்டி ரஷ்யா இத்தடையை முன்னர் விதித்திருந்தது.

தடை நீக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக 34 வயதான இருதய நோயாளியான நிக்கொலஸ் ஷிஷ்கின் என்பவருக்கு இருதய மாற்றுச் சிகிச்சை நடத்தப்பட்டது.

கார் விபத்து ஒன்றில் உயிரிழந்த ஒருவரின் இருதயமே இவருக்குப் பொருத்தப்பட்டது. (இ-எ)


## டாங்கே சுகயீனம்

பம்பாய், நவ. 10

இந்தியாவின் பழம்பெரும் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. எஸ். ஏ. டாங்கே சுகயீனங் காரணமாக பம்பாய் ஜே. ஜே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

உடல் நிலையில் அபிவிருத்திகாணப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

### பொய்யாமொழி



குறள்:

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

பொருள்:

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ?

## கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக போதனா மொழி மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்

### கல்விக் கருத்தரங்கில் உரை

பலாலி, நவ. 11

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் போதனா மொழி ஆங்கிலமாக இருப்பது கல்வித் தத்துவ- உளவியல் ரீதியான கருத்துக்கு முரண்பட்டதாகும். உடனடியாக இக்கல்விக்கருத்து மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்-பல்கலைக்கழகக் கல்வித் துறைத் தலைவர் போராசிரியர் ப. சந்திரசேகரம் யாழ், கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற கல்விக் கருத்தரங்கில் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மறு மலர்ச்சிக்கழகமும், மாணவர் அமைப்பும் ஒழுங்கு செய்திருந்த பாடசாலை அதிபர்கள், கல்விமான்களது கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ்ப் பகுதிகளுக்கு பூரணத்துவமான இரண்டு பல்கலைக் கழகங்களையே நீண்டகாலமாகத் தமிழ்மக்கள் கேட்டு வந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அக்கோரிக்கையின்விளைவாகஅமைக்கப்பட்டாலும் இன்னும் அதுவும் பூரணத்துவம் பெற்றதாக இல்லை என்பது வேதனையானதே.

தொழில் நுட்ப- தொழில் நுணுக்கக்கல்வியின் உயர்ந்த நிலையாகிய பொறியியல் பீடம் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட வேண்டும்.

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத் துறை மட்டுமே போதிக்கப்படுமென்ற அரசின் கல்விக் கொள்கை மீளாய்வு செய்யப்பட்டு அது பூரண பல்கலைக்கழகமாக்கப்பட வேண்டும்.

தனியார் கல்வி நிறுவனங்கள் போன்றதே தனியார் மருத்துவ கல்லூரியுமாகும்.

சுதந்திர தமிழீழத்தில் அந்நிய ஏகாதிகத்தியத்தின் முறையாகிய தனியார் கல்வியில் ஆதிக்கம் செலுத்துவது முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும்.

இப்படி அவர் தெரிவித்தார்.

''இன்றைய கல்வியமைப்பு'' என்ற தலைப்பில் திரு. வ. ஆறுமுகமும்

''உளவியலும் கற்பித்தலும்'' என்ற பொருள் பற்றி திரு. க. சின்னத்தம்பியும்,

''தொழில் நுட்பக் கல்வி'' என்ற தலைப்பில் திரு. எம். ஜி. புள்ளேநாயகமும்,

''அழகியற் கல்வி'' என்ற தலைப்பில் திரு. இ. முருகையனும்,

''கல்வியும் அரசியலும்'' என்ற தலைப்பில் கலாநிதி. எஸ். கிருஷ்ணராசாவும்,

''சமகால நிகழ்ச்சிகள் கல்வியில் ஏற்படுத்திய தாக்கம்'' என்ற பொருள் பற்றி திரு. சி. ரி. இராசேந்திராவும்,

''கலைத்திட்ட ஆக்கம்'' என்னும் பொருள் பற்றி கலாநிதி சபா. ஜெயராசாவும் விரிவுரை நிகழ்த்தினர்.

கருத்தரங்கு முடிவில் 'பள்ளி எழுந்திடுவீர்' என்ற நவீன உத்திநாடகமும் மேடையேற்றப்பட்டது. (இ-119)

## சமய தீட்சை

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையில் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏழு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சமயதீட்சை கொடுக்கப்படும்.

ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமை காலை 8-30 மணியளவில் சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் தீட்சை கொடுக்கப்படும் நிகழ்ச்சி நடைபெறும்.

பிரம்மஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் இதனைச் செய்வார். (ஒ)

### சமய சந்நிதிகளில்

## புளியங்குளம் கந்தசுவாமி கோயிலில்

யாழ்ப்பாணம், நவ. 11

புளியங்குளம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் அஷ்டோத்ர சத சங்காபிஷேக மணவாளக்கோலத் திருவிழா 13 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

திருவிழாவை அருள்மிகு வேதாரணியசுவாமி தேவஸ்தானம் பரம்பரை தர்மகர்த்தாவும் வரணி, கரணவாய் ஆதீனத் தலைவருமாகிய ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்கள் நடாத்தி அருளுரை வழங்குவார்.

திரு. வே. சபாநாயகம் (வவுனியாபிராந்தியக் கல்விப்பணிப்பாளர்) ஆசியுரை வழங்குவார்.

'தனியானைச் சகோதரன்' என்ற தலைப்பில் வித்வான் மு. சபாரத்தினம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-10)

## கலட்டி நாகதம்பிரான் மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்ப்பாணம் கலட்டியில் அருள்மிகு நாகதம்பிரான் ஆலய மகா கும்பாபிஷேகம் 13-ம் திகதி வியாழக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் 10-30 மணிவரை நடைபெறும்.

நாளை 12ஆம் திகதி புதன்கிழமை பிற்கல் 4-00 மணிமுதல் எண்ணெய் சாத்தும் வைபவ நடைபெறும்.

சிவஸ்ரீ ச. நித்தியானந்தக்குருக்கள்சிவஸ்ரீ விவேகானந்தக் குருக்கள் ஆகியோர் இக்கிரியா நிகழ்ச்சிகளை நடத்துவர்.

இக்கோயில் பல்தொழில் நுட்பக் கல்லூரி முன்பாக அமைந்துள்ளது. (ஒ)

பிரதமர் கூறுகிறார்

## எமது நண்பர்களான வெளிநாட்டுச் சக்திகளும் தீவிரவாதிகளுக்கு உதவி

கொழும்பு, நவ. 11

எமது நாட்டின் நண்பன் என்று கூறிக் கொள்ளும் வெளிநாட்டுச் சக்திகளும் தீவிரவாதிகளுக்கு உதவுகின்றன. தீவிரவாதிகளுக்கு வெளிநாட்டு உதவி கிடைக்காவிட்டால் எமது இராணுவம் தீவிரவாதிகளை இலகுவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கும்.

இப்படி பிரதமர் பிரேமதாச சொன்னார்.

வாரியப்பொலையில் கடந்த ஞாயிறு நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் பிரதமர் பிரேமதாச சொன்னதாவது;

தீவிரவாதம் எமது அரசுக்கு விடுக்கப்பட்ட (4ஆம் பக்கம் பார்க்க)

### வாசகர் திருமுகம்

## சிறுப்பர் மடத்தின் பணி தொடர வேண்டும்

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் கீரிமலையின் மகத்துவம் சிறிதளவும் குறையவில்லை.

அபரக் கிரியை செய்ய வருவோரும், பக்தர்களும் தங்கியிருந்து ஆறுதலடையப் பல மடங்கள் இருந்து வந்தன. ஆனால் போதிய கண்காணிப்பு இல்லாதபடியால் அவற்றின் முக்கியத்துவம் அருகி வருகின்றது.

இந்த மடங்களில் சிறுப்பர் மடமும் சிறப்பு வாய்ந்தது எனச் சொல்லலாம்.

ஒரு காலத்தில் யாத்திரீகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்த இந்த மடம் இப்போது நலிந்த நிலையில் உள்ளது என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

முன்னர் கீரிமலை வாழ் மக்கள் இந்த மடம் யாத்திரீகர்களுக்குச் சிறப்புச் சேவையாற்றப் பல வகைகளாலும் உதவியதாக நாம் கேள்விப்பட்டது உண்டு.

அதே உதவிகளை அவர்கள் தொடர்ந்தும் செய்து மடத்துக்குச் சேதம் ஏற்படாது தடுத்து அதனை நிர்வாகத்தோடு சேர்ந்து பாதுகாப்பது அவசியம்.

இல்லையேல் வடக்கிலுள்ள புண்ணிய ஸ்தலங்களில் பிரசித்தி பெற்ற கீரிமலைக்கு வரும் சைவ மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும்.

இந்த மடம் ஸ்தாபித்து நூறு ஆண்டுகளாவதற்கு இன்னமும் சில வருடகாலமே உள்ளது. ஆதலாலும் இதனை உரிய சிறப்புடன் பாதுகாத்துக் கொண்டாடுவதற்கு அதன் பராமரிப்பாளர்களும் முன் வரவேண்டும்.

தமிழனுக்கு எழுந்துள்ள இக்கட்டான நிலையில் இந்த மடத்தின் நிர்வாகிகள் இந்த மடத்தின் சேவையை ஸ்திரப்படுத்தி அவசரமாக எழக்கூடிய வேறு பொறுப்புக்களையும் ஏற்றுப் பொதுமக்களுக்குத் தமது பணியைத் தொடர்ந்து செய்வார்களாக.

இராஜஇராஜேஸ்வரன் தங்கராசா
தலைவர், இந்து இளைஞர் மன்றம்.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரூடியோ வீனஸ்
சிறந்த கலர், கறுப்பு - வெள்ளை படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

11 - 11 - 1986 செவ்வாய்க்கிழமை

ஸ்ரூடியோ வீனஸ்
சிறந்த வீடியோ படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## வெளிமாவட்ட மாணவர் பல்கலைக் கழகத்துக்குள் தங்கி இருக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கென வெளி மாவட்டங்களிலிருந்து வந்து தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் 13 ஆம் திகதி முதல் பல்கலைக் கழகத்துள் தங்கியிருப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட மாணவன் விஜிதரன் காணாமல்போனதுதொடர்பாகவே இப்பாதுகாப்பு நடவடிக்கையைப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு மேற்கொண்டுள்ளது. (இ-5)

## நன்றி தெரிவிக்கிறார் விஜிதரனின் தந்தை

யாழ்ப்பாணம், நவ. 11

''எனது மகனுக்காக தமது உயிரைப் பணயம் வைத்து போராடும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எனது நன்றி''

காணாமல் போன யாழ் பல்கலைக் கழக மாணவன் விஜிதரனின் தந்தை திரு. அருணகிரிநாதர் இப்படிக்கூறினார்.

நேற்று நடைபெற்ற மாணவர் அமைப்புக் கூட்ட முடிவிலே அவர் உரையாற்றினார்

கண்ணீர் மல்க பேச முடியாத நிலையில் தத்தளித்தபடி அவர் காணப்பட்டார்.

சென்றவருடம் இதே நாட்களில் மகனை படையினர் மட்டக்களப்பில் பிடித்து வைத்திருந்த பின்னர் விடுதலை செய்தனர்,

தற்போது மகனை ஐ. சி. எம். ஏ. பரீட்சை எழுத அழைத்துச்செல்ல வந்த இடத்திலேயே மகன் பற்றி துக்ககரமான செய்தியை அறிந்து கொண்டேன் என்று கூறினார். (இ-5)

## அதிகாரப் பகிர்வுமூலம் தீர்வு

கொழும்பு, நவ 11

யதார்த்த பூர்வமான அதிகாரப்பகிர்வு மூலம் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்

இப்படி பகுத்தறிவு அபிவிருத்திக் கமிட்டி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பு, சட்டம்- ஒழுங்கு பராமரிப்பு, சமஷ்டியா, ஒற்றை ஆட்சியா ஆகிய பிரச்சினைகள் எல்லாம் பேச்சு வார்த்தை மேசையில் தீர்க்கப்பட வேண்டும்! கொலைக்களத்தில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### போராளி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேசித் தொடர்புகள் வழங்கப்பட்டன.

போராளித் தலைவர்கள், தொண்டர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இயக்க அலுவலகங்களின் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

அத்தொலைத் தொடர்புகள் மீண்டும் வழங்கப்பட்டுவிட்டன. (இ-எ)

## விஜிதரன் எப்படியும் கண்டுபிடிக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், நவ. 11

காணமற் போன யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் எப்படியும் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்று யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்து உள்ளது.

விஜிதரனை விடுவிக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவரின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன பொறியியல் பிரிவும் நேற்று அறிக்கை விடுத்தது.

கருத்துச் சுதந்திரம் எவருக்கும் மறுக்க முடியாதது. அதுவும் எதிர்கால புத்தி ஜீவிகளான மாணவருக்கு இச் சுதந்திரம் அத்தியாவசியமான தொன்று என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ எ)

### உண்ணாவிர...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தொடர்புமில்லை என இயக்கங்கள் வெளியிட்ட கருத்துக்களை நாம் ஏற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் மாணவர்கள் கீழ்க்கண்ட கோரிக்கைகளையும் முன் வைத்துள்ளார்கள்.

* கடத்திச் செல்லப்பட்ட மாணவன் விஜிதரன் எந்தவித நிபந்தனையுமின்றி 12 ஆம் திகதிக்கு முன் விடுதலை செய்யப்பட வேண்டும்.
* அரசியல் காரணங்கள் என்ற போர்வையில் மாணவர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.
* பல்கலைக்கழக மாணவர்கள் ஊழியர்கள் விரிவுரையாளர்கள் தொடர்பான பிரச்சினைகள் நிர்வாகத்தினூடாகவே அணுகப்பட வேண்டும்.
* இதற்கான உத்தரவாதத்தை சகல விடுதலை இயக்கங்களின் தலைவர்களும் நிர்வாகத்தின் ஊடாக மாணவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். (இ-5-10)

### எமது--

(3-ஆம் பக்க தொடர்ச்சி)

ஒரு சவால்.

தீவிரவாத முகாம்கள் இந்தியாவில் உள்ளன என்று நான் முன்னர் சொன்னேன்.

இப்படி பேசி இந்தியாவை நான் ஆத்திரப்படுத்துவதாக திருமதி பண்டாரநாயக்கா என் மீது குற்றஞ் சுமத்தினார்.

இந்தியாவை ஆத்திரப்படுத்துவது என் எண்ணம் அல்ல.

இப்படி பிரதமர் சொன்னார். (இ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 11 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60: N 86

வாழும் சூழலில் கல்வி பயில்வதற்கு

# யாழ் மாணவருக்கு மட்டும் உரிமை மறுக்கப்படலாமா?

## பெற்றோர் நடத்திய கண்டனக் கூட்டத்தில் கோடீஸ்வரன் உரை

யாழ்ப்பாணம், நவ. 11

மாணவருக்கு அவர்கள் சூழலில் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடு யாழ்ப்பாண மாணவருக்கு மட்டும் மறுக்கப்படலாமா?

பிரபல சட்டத்தரணி திரு. செ. கோடீஸ்வரன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியிருக்கிறார்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் கல்விகற்று வந்த பெரும்பாலான மாணவருக்கு யாழ். இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இடம் மறுக்கப்பட்டதை எதிர்த்து பெற்றோர் நடத்திய கண்டனக் கூட்டம் ஒன்று நீராவியடி சைவபரிபாலனசபையின் நாவலர் மண்டபத்தில் கடந்த ஞாயிறு பிற்பகல் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. கோடீஸ்வரன் முன் கண்டவாறு கேட்டார்.

திரு. பஞ்சரத்தினம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. கோடீஸ்வரன் மேலும் சொன்னதாவது;

பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக் கழகம்வரை மாணவருக்கு அவர்கள் வாழும் சூழலில் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது.

இக் கோட்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மற்றும் ஏனைய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டு உள்ளன.

அதேபோல ஆரம்ப பாடசாலைகளிலும் அவற்றின் சூழலில் வாழும் பிள்ளைகளுக்கே முதலிடம் அளிக்கப்படவேண்டும்.

ஆனால் யாழ்ப்பாணக் கல்வித்திணைக்களம் மட்டும் யாழ்ப்பாணத்தில் உள்ள இடைநிலைக் கல்லூரிகளுக்கு இந்த ஏற்பாடு தேவைஇல்லைஎன்று கூறி செயல்படுகிறது.

### சுற்று நிருபம் கூறுவது என்ன?

சகல இடைநிலைக் கல்லூரிகளிலும் அவற்றின் சூழலில் வாழும் மாணவருக்கு முன்னுரிமை கொடுத்து அனுமதிக்கப்படவேண்டும் என்று கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் வலியுறுத்துகிறது.

அனுமதி வழங்கும் பரீட்சைகளை அந்தந்தப் பாடசாலை அதிபர்களே நடத்த வேண்டும் என்றும் அந்த சுற்று நிருபம் கூறுகின்றது.

நிலைமை இப்படி இருக்க, யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள அதிகாரிகளோ அதிபர்களின் அதிகாரத்தைக் கைப்பற்றி தங்கள் அதிகாரத்தைக் காட்டியிருக்கின்றனர்

### பணிப்புரை மீறல்

இது விஷயமாக யாழ்ப்பாணத்தின் பிரபல கல்விமான்களின் ஆலோசனைகளுடன் விடப்பட்ட வேண்டுகோளை யாழ் கல்வித்திணைக்களம் நிராகரித்துவிட்டது.

அமைச்சின் பணிப்புரைகள் மீறப்பட்டுள்ளன. கல்விமான்களின் சிபார்சுகள் புறக்கணிக்கப்பட்டன.

யாழ். கல்வித் திணைக்கள அதிகார வரம்பு எல்லைகளுக்கு உட்பட்டதே ஒழிய எல்லைகளை மீறியது அல்ல என்பதை சுட்டிக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் பெற்றோருக்கு ஏற்பட்டுள்ளது.

இப்படி திரு. கோடீஸ்வரன் சொன்னார்.

'அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி திரு. சிவபாலசிங்கம் பேசுகையில், ஆரம்ப பாடசாலை மாணவருக்கு இடைநிலைக் கல்லூரிகளின் அனுமதியின் போது சிறப்பு உரிமை வழங்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையை எனது சங்கம் ஆதரிக்கிறது''-என்று குறிப்பிட்டார்.

சட்டத்தரணி திரு. இராஜராஜேஸ்வரன் தங்கராஜா பேசுகையில், பெற்றோர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற அனைத்தையும் செய்வேன் - என்று உறுதி அளித்தார்.

சூழலில் வாழும் மாணவருக்கு சம்பந்தப்பட்ட இடைநிலைக் கல்லூரிகளில் இடம் கிடைப்பதற்கான மேல் நடவடிக்கைகளை எடுக்க திரு. இராஜராஜேஸ்வரன் தங்கராஜா தலைமையில் ஒரு குழுவும் திரு. கோடீஸ்வரன் தலைமையில் இன்னொரு குழுவும் தெரிவு செய்யப்பட்டன. (இ-எ)

## சாம்பல் தீவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விவரித்தார்.

அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

சாம்பல் தீவுக் கிராமத்திற்கு அருகே பிள்ளைக்குளம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் மீது கடந்த 30 ஆம் திகதி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையினர் கடும் தாக்குதல் நடத்தினர்.

### 13 சிப்பாய்கள் மரணம்

இத் தாக்குதல் காரணமாக முகாம் முற்றாக சேதமடைந்தது. சுமார் பதின் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்

கடந்த மாதம் 30 ஆம் திகதி பிற்பகல் ஆறு மணியளவில் மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த 40 போராளிகள் இத்தாக்குதலில் ஈடுபட்டனர்.

போராளிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து முகாம் மீது தாக்குதல் தொடுத்தனர்.

### 3 மணிநேரம் நடந்தது

சுமார் மூன்று மணி நேரமாக நடை பெற்ற இத்தாக்குதல் காரணமாக பதின் மூன்று சிப்பாய்கள் கொல்லப் பட்டனர்.

ஏனையோர் தப்பி ஓட முனைந்த போது தொடர்ந்தும் எமது போராளிகள் தாக்குதல் நடத்தியதில் மேலும் பல சிப்பாய்கள் கொல்லப் பட்டனர்.

முகாமுக்குள் இருந்து ஏழு சிப்பாய்களின் சடலங்கள் எமது போராளிகளால் மீட்கப்பட்டன.

முகாமுக்குள் இருந்த பல ஆயுதங்கள், சிப்பாய்களின் தலைக்கவசங்கள், அடையாள அட்டைகள் சிப்பாய்களுக்கு வந்த கடிதங்கள் என்பனவும் மீட்கப்பட்டன.

முகாம் மீது நாம் மேற்கொண்ட தொடர்ச்சியான தாக்குதலை சமாளிக்க முடியாத சிப்பாய்கள் சிலர் பி. எல். ஏ. ஸ்ரொப் என்று எம்மைப் பார்த்துக் கூறினர்.

நாம் ஈ. பி. ஆர். எல். எப். என்றும் எம்மிடம் சரணடையுமாறும் அவர்களிடம் கூறினோம்.

இதனையடுத்து இரண்டு சிப்பாய்கள் கைகளில் கைக் குண்டுகளை ஏந்திய படி எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

எமக்கு கிட்ட நெருங்கிய அவர்கள், கைகளில் இருந்த கைக்குண்டுகளின் கிளிப்புக்களைக் கழற்ற முற்பட்ட போது நாம் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர்.

தாக்குதலில் கொலையுண்ட ஏழு சிப்பாய்களின் சடலங்களையும் எடுத்து வந்து திருகோணமலையையும் சாம்பல் தீவையும் இணைக்கும் பாலத்தின் மீது போட்டு பாலத்தைக் குண்டு வைத்து தகர்த்தோம்.

மற்றும் இரண்டு பேரின் சடலங்கள் ஆறு ஒன்றினுள் போடப்பட்டன.

சமரின் போது ஆறு சிப்பாய்கள் வரையில் படுகாயமடைந்தனர்.

இறந்தவர்களில் ஒருவர் அத்த நாயக்கா எனப் பின்னர் தெரிய வந்தது.

### வெற்றித் தாக்குதல்

முழுக்க முழுக்க இராணுவ கடற்படை, ஆகாயப்படைகளை கட்டுப்பாட்டில் உள்ள இப்பகுதியில் நாம் நடத்திய இத்தாக்குதல் ஈழத்தின் வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான ஒன்று ஆகும்.

இத்தாக்குதலின் போது 18 எம், 16 எம், 30 கலிபர் எல். எம். ஜி., பி. 80, ஏ. கே., 100 எம். எம், எவ். எவ். 85 மோட்டார்களையும் நாம் பாவித்தோம்.

- இவ்வாறு போராளி சுந்தரன் தெரிவித்தார். இச் செய்தியாளர் மாநாட்டில் ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த ஏனைய பிரமுகர்களும் கூட இருந்தனர். (அ-10)

## தந்தை கேட்டதால் மகனுக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை அதிகரிப்பு

புளோரிடா, நவ 10

தந்தையின் வேண்டுகோளின் மீது மகனுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை அதிகரிக்கப்பட்டது.

இச்சம்பவம் அமெரிக்காவில் நடந்தது.

26 வயது இளைஞரான பிறெஸ்டன் என்பவர் போதைவஸ்து பாவித்த குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

அதற்காக அமெரிக்க நீதிமன்றம் ஒன்று 10 நாள் சிறைத் தண்டனை விதித்தது.

இதைக் கேள்விப்பட்டார் இளைஞனின் 73 வயது தந்தை அல்பிரட் காம்பெள். நீதிமன்றத்தில் தண்டனையை எதிர்த்து மனுத்தாக்கல் செய்தார்.

மகனுக்கு விதித்த தண்டனை போதாது. தண்டனையை அதிகரிக்க வேண்டும் இப்படி மனுவில் தந்தை கேட்டுக் கொண்டார்.

நீதிமன்றம் தந்தையின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டது. மகனின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் 10 நாள் சிறைத்தண்டனையை 90 நாட் சிறைத்தண்டனையாக நீதிமன்றம் அதிகரித்தது. (இ-எ)

## புதிய இராணுவ முகாம்

யாழ்ப்பாணம், நவ. 11

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சாம்பல்தீவுக் கிராமத்திற்கு அருகே புதிய இராணுவ முகாம் ஒன்று திறக்கப் பட்டுள்ளது.

ஸாஹிரா ஹோட்டல் அமைந்துள்ள இடத்திலேயே இந்த முகாம் அமைக்கப் பட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் இம் முகாமில் வைக்கப் பட்டுள்ளனர். (இ-10)

## 80 தமிழ் இளைஞருக்கு ஆசிரிய பயிற்சி

கொழும்பு, நவ. 11

தேசிய இளைஞர் சேவைக் கழகத்தின் சிபாரிசுக்கு இணங்க 80 தமிழ் இளைஞர்களுக்கு ஆசிரியபயிற்சி வழங்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

3 வாரப் பயிற்சியின் பின்னர் இந்த இளைஞர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப் படுவர். (இ-எ)

## இலவச மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணம், நவ 11

மல்லாகம் பகுதியில் வசதியற்ற 25 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவிருக்கின்றன.

கோப்பாய் லயன்ஸ் கழகம் தனக்குக் கிடைத்த 300 மூக்குக் கண்ணாடிகளில் 25 ஐ மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சிபார்சுப்படி, மல்லாகம் பகுதி மக்கள் மத்தியில் விநியோகிக்க முன்வந்துள்ளது.

இது சம்பந்தமான கண் பரிசோதனை விரைவில் நடந்து இலவச மூக்குக் கண்ணாடி விநியோகம் டிசம்பர் 6 ஆம்திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### ரிக்கெட்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக 'ஹீரோ' சைக்கிள்களும் வழங்கப்பட உள்ளன.

இரண்டாவது சுற்று சீட்டிழுப்பு அடுத்த மாதம் பத்தாம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி முன்பாக நடைபெறும். (இ 10)

## இராணுவத்துக்கு பீரங்கி வண்டிகள்

கொழும்பு, நவ. 11

அடுத்த ஆண்டில் இலங்கை இராணுவத்துக்கு பீரங்கி வண்டிகள் வாங்கப்படவுள்ளன.

இதற்கான நிதி ஒதுக்கீடு 1987 வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளது

எந்தநாட்டில் இருந்து இந்த பீரங்கி வண்டிகள் வாங்கப்படும்! எந்த மாதிரியானவை அவை என்பதுபற்றி தகவல் தெரிவிக்க இராணுவ வட்டாரங்கள் மறுத்து விட்டன:

இராணுவத்துக்கு இரண்டு ஸ்குவாட்ரன் கவச வாகனங்கள் வாங்க 25 கோடி 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

8 கோடி 60 லட்சம் ரூபா செலவில் விமானப் படைக்கு 12 கவசவாகனங்கள் வாங்கப்படும்.

அதிரடிப் பொலீஸ் படைக்கு 1987இல் 25 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

1986 இல் 5 கோடி 16 லட்சம் ரூபா தான் ஒதுக்கப்பட்டது. (இ-எ)

### நவீன சந்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூடுவதற்கு தீர்மானிக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

சேதமடைந்த வங்கிக் கிளைக் கட்டடத்தைத் திருத்துவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

இப்படி ஆணையாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கடிதத்தின் பிரதிகள் மக்கள் வங்கித் தலைவர் பொது முகாமையாளர், நவீன சந்தைக்கிளை முகாமையாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டு உள்ளன.

இதனிடையில், இக்கிளையை எக்காரணங்கொண்டும் வேறு இடத்துக்கு மாற்றக்கூடாது! தற்போதைய இடத்திலேயே மீண்டும் திறக்க வேண்டும் என்று யாழ் நவீன சந்தை வர்த்தகர் சங்கம் வங்கி பிராந்திய முகாமையாளரைக் கேட்டுள்ளது.

இன்று (செவ்வாய்) காலை பிராந்திய முகாமையாளரை நேரில் சந்தித்து சங்கத் தூதுக் குழு ஒன்று வற்புறுத்தவும் இருக்கிறது.

கடந்த நான்காம் திகதி யாழ் கோட்டையில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் இவ் வங்கிக் கிளை சேதமடைந்தது தெரிந்ததே.

மறுநாள் வியாழன் செயல்பட்ட இக்கிளை பின்னர் மூடப்பட்டு விட்டது. (இ-எ)

### எம்மைப் பிடித்த கடற்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வாகப் பறந்து எம்மை நோட்டமிட்டது.

அச் சமயம் எமது இழுவைப் படகை நோக்கி விரைந்து வந்த கடற்படையினர் பீரங்கிப் படகு ஒன்று எம்மை நோக்கி எச்சரிக்கை வேட்டுத் தீர்த்தது.

நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்த நிலையில் இருந்தோம். அப்பொழுது இன்னுமொரு கடற்படைப்படகும் எம்மை நோக்கி வந்து சுற்றி வளைத்தது.

அதிலிருந்தவர்கள் நல்ல தமிழில் எம்முடன் கதைத்தார்கள். தம்முடன் வந்து இராணுவ முகாமிற்கு இறக்கவேண்டிய பொருள்களைஇறக்குவதற்கு உதவிசெய்யும்படி அவர்கள் கேட்டார்கள்.

அப்படிச் செய்தால் தான் தொடர்ந்தும் மீன் பிடிக்க அனுமதி அளிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

அவர்களுடன் சென்ற எமக்கு கப்பலொன்றிலிருந்து உணவு வகைகள் அரிசி மூடைகள், பருப்பு, கருவாடு, முள்ளுக்கம்பிஆகியனவற்றை இறக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

அக் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பொழுது, கரையில் இருந்து போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் அவர்களால் அவற்றை இறக்க முடியாமல் போனதாக எம்மிடம் தெரிவிக்கப் பட்டது.

மாலைவரை வேலை செய்த எமக்கு பால் கோப்பி, கேக் வகைகளுடன் மதிய உணவாக முட்டையுடன் கூடிய சாப்பாட்டுப் பார்சலும் தந்தார்கள்.

மாலை 4.00 மணிக்கு எமது வேலை முடிந்த பொழுது எம்மிடம் இருந்து தமது தேவைக்கென எடுக்கப்பட்ட மீனுக்கு 75 ரூபா தந்தார்கள்.

அத்துடன் எஞ்சிய மீன், இறால் போன்றவற்றைப் பழுதடையாமல் தமது குளிர்சாதனப் பெட்டியில் வைத்தும் தந்தார்கள்.

அத்துடன் பால்டின்கள், 40 லீட்டர் டீசல் ஆகியனவும் தந்தார்கள்.

எமது சகல விவரங்களும் அவர்களால் பதிவு செய்யப்பட்டன.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-ஒ-160)

## உதயன் - சஞ்சீவி
### சந்தா விவரம்
உள்நாடு

| காலம் | உதயன் | சஞ்சீவி | உதயனும் சஞ்சீவியும் |
|---|---|---|---|
| | ரு. ச | ரு. ச | ரு. ச. |
| ஒரு வருடம் | 313·00 | 104·00 | 417·00 |
| 06 மாதம் | 156·50 | 52.00 | 208·50 |
| 03 மாதம் | 78·50 | 26,00 | 104·50 |
| அஞ்சல் செலவு உட்பட | | | |
| காலம் | ரு ச | ரு ச | ரு. ச. |
| ஒரு வருடம் | 469-50 | 156-00 | 625- 50 |
| 06 மாதம் | 234-75 | 78-00 | 312-75 |
| 03 மாதம் | 117-50 | 39-00 | 156-50 |

சந்தா விவரங்கள் மாற்றத்துக்குரியன

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org